DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**MCOP.No. 655/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Deposition of witness for** | : | R.W.1 | **District** | | தஞ்சாவூர் |
| **Name** | : | மாணிக்கவாசகம் | **Calling** | : | ஓட்டுநர் தமிழ்நாடு அரசுபோக்குவரத்துகழகம் |
| **Father Name** | : | கோவிந்தராசு | **Age** | : | 53 |
| **Village** | : | திருவிடைமருதூர் | | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 07.11.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரார் நிறுவனத்தின் பேருந்து ஓட்டுநர் சூவன். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் . அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். ஆவணங்கள் குறியீடு இல்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்மந்தமாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக குற்ற வழக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது என்றும், அதில் நான் தவறாமல் ஆஜராகிறேன் என்றும் சொன்னால் சரிதான் . ஒரு பேருந்து நிலையத்தில் இருந்து மற்றொரு பேருந்து நிலையத்திற்கு செல்வதற்கு எங்களுக்கு நேர அட்டவணை உண்டு என்றால் சரிதான் . இந்த வழக்கு சம்மந்தமாக என் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான் , என் மீது தவறு இல்லை என்பதால் எடுக்கவில்லை . என் மீது தவறு இல்லை என்று எனது நிர்வாகத்தால் சொல்லப்பட்டது . நான் சீக்கிரம் செல்ல வேண்டுமென்பதற்காக அதிவேகமாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, அந்த இடத்தில் வேகமாக ஓட்ட முடியாது. இந்த விபத்திற்கு நான் தான்

முழு காரணம் என்றும், இறந்தவருக்கு நான் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக என் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் , உண்மையை மறைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***